கர்த்தருக்கு பயப்படும் பயம்

சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே,
தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும்
ஆச்சரியமுமானவைகள்; யுகங்களின் ராஜனே,
தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.
யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை
மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்?
தேவரீர் ஒருவரே பரிசுத்தர்.[1]

கர்த்தாவே,உமக்கு பயப்படும் பயம் ஞானத்தின் ஆரம்பம்.[2]

என் வழிகளில் எல்லாம் நான் உம்மை நினைத்து,
என் சுய புத்தியின் மேல் நான்
சார்ந்துகொள்வதில்லை.[3]

உமக்கு பயப்படுகிறவனுக்கு அடைக்கலம் உண்டு.[4]
ஆனால் மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை
வருவிக்கும்.[5]

நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்;
நீரே என் தேவன் என்று சொன்னேன்.[6]

கர்த்தாவே உம்முடைய இரகசியம் உமக்குப்
பயந்தவர்களிடத்தில் இருக்கிறது,[7] ஆகையால்
கர்த்தாவே, நான் உமக்கு பயந்து தீமைக்கு
விலகுகிறான்.[8] கர்த்தாவே உமக்கு பயப்படுதல்
ஆயுசுநாட்களைப் பெருகப்பண்ணும்.[9]

[1] வெளி. 15:3–4
[2] சங்கீதம் 111:10
[3] நீதிமொழிகள் 3:5–6
[4] நீதிமொழிகள் 14:26
[5] நீதிமொழிகள் 29:25
[6] சங்கீதம் 31:14
[7] சங்கீதம் 25:14
[8] நீதிமொழிகள் 3:7
[9] நீதிமொழிகள் 10:27

வெளிப்படுத்தல் 15:3-4
அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்.

சங்கீதம் 111:10
கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.

நீதிமொழிகள் 3:5-6
உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

நீதிமொழிகள் 14:26
கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்.

நீதிமொழிகள் 29:25
மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.

சங்கீதம் 31:14
நானோ கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொன்னேன்.

சங்கீதம் 25:14
கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.

நீதிமொழிகள் 3:7
நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு.

நீதிமொழிகள் 10:27
கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசுநாட்களைப் பெருகப்பண்ணும்; துன்மார்க்கருடைய வருஷங்களோ குறுகிப்போம்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au

PC 06